

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (23.12.2024) தலைமைச் செயலகத்தில், இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் 11.12.2024 அன்று புதுதில்லியில், இந்திய அளவில் 2024–ஆம் ஆண்டு மகளிருடன் நல்லிணக்கம் கொண்ட ஊராட்சியாக தென்காசி மாவட்டம், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், வரகனூர் ஊராட்சி தேர்வு செய்யப்பட்டு அதற்காக வழங்கப்பட்ட மூன்றாம் பரிசுக்கான விருதினை வரகனூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.ம.சுப்புலட்சுமி காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை “தேசிய விவசாயிகள் தின”த்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (23.12.2024) காலை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் கூட்டு இயக்க மாநில தலைவர் பி.கே.தெய்வசிகாமணி தலைமையில் மாநில நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அதுபோது தமிழ்நாடு விவசாயிகள் நலன் குறித்த பல்வேறு கோரிக்கை அடங்கிய மனுவினையும் அளித்தனர். அதுபோது, கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.





